ஈழநாடு
மின்னிதழ் E-paper
Eelanadu
24.06.2020 புதன்கிழமை

## கருணாவுக்குச் சுகவீனமாம் சி.ஐ.டிக்கு அவர் வரவில்லை

கொழும்பு, ஜூன் 24
சுகவீனம் காரணமாக நேற்று வாக்குமூலம் அளிக்க முடியவில்லை என்று கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தனது சட்டத்தரணி ஊடாக, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்துள்ளார்.
குணமடைந்ததும் வாக்குமூலம் வழங்கவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.
இதனை அடுத்து கருணா விடம் விசாரணைகளை

02

# ஒரு மாகாணத்தை ஒரு தரப்பு உரிமை கொண்டாட முடியாது!

## பிரதமர் மஹிந்த திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 24
“தெற்கில் பிறந்தவர் வடக்கிலும், வடக்கில் பிறந்தவர் தெற்கிலும் வாழ்வதற்கு உரிமை உண்டு. ஒரு மாகாணத்தை ஒரு இனத்திற்குரியது என்று எவராலும் உரிமைக் கொண்டாட முடியாது. என்பதை மிக தெளிவாகத் குறிப்பிடவேண்டும்.”
-இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

02

## சஜித் பங்கேற்கவிருந்த வைபவத்தை நிறுத்தியது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 24
ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் 37 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை கொல்கஸ்ஹோவிட்ட வேதெர வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்வதற்காக நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தை தேர்தல் ஆணைக்குழு தலையிட்டு நிறுத்தியுள்ளது.
இந்த வைத்தியசாலையில் குறைபாடாக காணப்பட்ட நோயாளிகளின் இருதயத்தை பரிசோதிக்கும் இயந்திரம் உட்பட மருத்துவ உபரகணங்களை வழங்குவதற்காக சஜித் பிரேமதாஸ தலைமையில் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
இந்த வைபவத்தில் முன்னாள் சுகாதார அமைச்சர் பீ. தயாரத்ன, மேல் மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் லக்ஷ்மன் அபயகுணவர்தன, சட்டத்தரணியும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான எரந்த வெலியங்கே, ஹோமாகமை பிரதேச சபையின்

02

## வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி இறுதிக்கட்டத்தில்!

கொழும்பு, ஜூன் 24
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக, அரச அச்சகர் கங்கானி கல்பனா

02

## சங்கிலி அறுக்கும் சகோதரர்கள் பொம்மைவெளியில் சிக்கினர்!

### யாழ்ப்பாணப் பொலிஸ் அதிரடி

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேசங்களில் அதிகாலை வேளைகளில் வீதியில் பயணிக்கும் பெண்களிடம் தங்க நகைகளை அறுக்கும் பொம்மைவெளியைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தக் கைது நடவடிக்கை யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் நேற்று முன்

02

## மகனைத் தேடிய மற்றொரு தந்தையும் நேற்று மரணம்!

வவுனியா, ஜூன் 24
காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி வந்த தந்தை ஒருவர் சுகயீனம் காரணமாக வவுனியாவில் நேற்று உயிரிழந்துள்ளார்.
காணாமலாக்கப்

02

## வடக்கு குண்டுவெடிப்புகளின் பின்னணியில் பெரும் அரசியல்

### விக்கி வெளியிட்ட தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கில் குண்டு வெடிப்புகள் நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்களுக்கு அரசியல் பின்னணியே காரணம் என்று தாம் நம்புவதாக வடக்கு மாகாண முன்னாள்

02

## ஆபிரிக்கர்கள் நால்வர் கைது!

கொழும்பு, ஜூன் 24
நிதி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர்கள் நால்வர் கல்கிஸையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நைஜீரியப் பிரஜைகள் மூவரும் உகண்டா நாட்டு பெண்ணொருவருமே இணையத்தளத்தினூடாக மோசடி செய்த குற்றச்சாட்டில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
பேஸ்புக் மற்றும்

02

## மக்களிடம் நாம் பணம் கேட்பதில் தவறில்லை!

### கூறுகின்றார் விக்னேஸ்வரன்




யாழ்ப்பாணம், ஜூன் 24
“மக்களின் சொல் கேட்டு, மக்களுக்காக செயற்படுவதற்காக மக்களிடம் பணம் கேட்பதில் தவறில்லை. செல்வந்தர்களிடம் பணம் வாங்கி அவர்களின் கைப்பொம்மை யாகச் செயற்படு

02

## சுகாதாரப் பரிசோதகரை தாக்கிய வர்த்தகர் கைது

### விளக்கமறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் மாநகர வீதியில் கழிவுப் பொருள்களை வீசுவதைத் தடுத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
| --- | --- | --- | --- | --- |
| 1,991 | 40 | 432 | 54 | 1,548 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## சுகாதாரப்...

செய்யப்பட்ட வர்த்தகரை எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அத்தியடிப் பகுதியில் வீதியில் நீண்ட காலமாக கழிவுப்பொருள்கள் வீசப்பட்டு வந்தன. அதனால் அந்தப் பகுதியைச் சூழவுள்ள குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் காத்திருந்தார்.

அதன்போது ஒருவர் கழிவுப்பொருள்கள் அடங்கிய பொதியை வீசுவதற்கு முற்பட்டதை அவதானித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர், அதனைத் தடுக்க முற்பட்டுள்ளார். அதனால் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிவிட்டு குப்பைப் பொதியை வீசிவிட்டு அந்த நபர் தப்பித்திருந்தார். சம்பவத்தில் காயமடைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

தாக்குதல் நடத்தியவரின் மோட்டார் சைக்கிள் இலக்கத் தகட்டின் அடிப்படையில் அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள கிறீம் ஹவுஸின் உரிமையாளரை நேற்று திங்கட்கிழமை கைது செய்தனர். அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கினார் என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்று முற்படுத்தினர்.

இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் 4 பிரிவுகளின் கீழ் பி அறிக்கை மன்றில் முன்வைக்கப்பட்டது.

பொது ஊழியர் ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொது ஊழியரின் கட்டளையை மதிக்காது செயற்பட்டமை, பொது ஊழியருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்பட்டமை மற்றும் பொது ஊழியரைத் தாக்கியமை ஆகிய நான் குற்றச்சாட்டுக்கள் பி அறிக்கையில் முன்வைக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகருடன் 4 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேக நபரை எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## மக்களிடம்...

வதே தவறானது. அதனை நாங்கள் செய்யமாட்டோம், செய்ய விரும்பவும் இல்லை."

-இவ்வாறு கூறியிரு க்கிறார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சீ.வி.விக்னேஸ்வரன்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில்-

நாங்கள் மக்களிடம் பணம் கேட்பதில் தவறு என்ன இருக்கிறது? மக்களின் சொல் கேட்டு, மக்களுக்காக செயற்படுவதற்கு மக்களிடம் பணம் கேட்பதில் தவறு என்ன? பெரும் செல்வந்தர்களிடம் பணம் கேட்டுவிட்டுப் பின்னர் அவர்களின் கைபொம்மையாக இருப்பதே தவறு. அதனை நாம் செய்யமாட்டோம்.

மாகாணசபை காலத்தில் எங்களுக்கு அனுப்பிய பணம் எதுவும் திருப்பினுப்பப்படவில்லை. ஆனால் அவர்களின் அமைச்சர்களுக்கு அனுப்பிய பணத்தை செலவிடாமல் எமது தலையில் கட்டுகிறாரோ தெரியவில்லை. இவ்வாறான விமர்சனங்கள் வைக்கப்படுவதற்கு உள்ள காரணம் அச்சம். மக்களுக்குச் சேவை செய்ய, மக்களிடம் பணம் கோருவதில் என்ன தவறு?

மக்களிடம் பணம் பெறும்போது, அவர்களுக்கு சேவை செய்யும் தார்மீகக் கடப்பாடு வேட்பாளர்களுக்கு அதிகரிக்கும். மக்களால் முடிந்த சிறிய, பெரிய அளவிலான உதவியைக் கோருகிறோம். அதற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படும். பணத்தை வழங்கிய மக்களே நாளை உரிமையுடன் எமது குறைகளை சுட்டிக்காட்டுவார்கள்.

மக்களுக்காகச் சேவை செய்ய மக்களிடம் பணம் கேட்பதில் தவறில்லையென்பதே எமது நிலைப்பாடு. சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழ் மக்களிடம் பணம் திரட்டி, இங்குள்ள பெரும் பணக்காரர்களிடம் பணம் வாங்கி, அவர்களின் சொற்படி நடப்பதை நாங்கள் விரும்பவில்லை. மக்களை நாம் நம்பிக்கைக்குப் பொறுப்பாக்கி, அவர்களின் நம்பிக்கைக்கு நாம் பொறுப்பாக செயற்படுவோம் - என்றார்.

## சஜித்...

எதிர்க்கட்சித் தலைவர் ரங்க அபேசிங்க, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துக்கொள்ளவிருந்தனர்.

வைபவம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாக இருந்ததுடன் ஒரு மணி நேரத்திற்கு முன்னர் வைபவம் நடைபெறவிருந்த இடத்திற்குச் சென்ற, மொறட்டுவை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரம்மிந்து டி சில்வா உட்பட பொலிஸ் அதிகாரிகள், இந்த வைபவத்தை நிறுத்துமாறு தேர்தல் ஆணையாளர் தமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் எனக் கூறியுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழு பொலிஸாருக்கு அனுப்பிய கடிதத்தை ஏற்பாட்டாளர்கள் கேட்கும்படி வாசித்து காட்டியுள்ளனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பங்கேற்பின்றி அந்த மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

## வடக்கு...

முதல்வரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர், இந்தச் சம்பவங்களுடன் எவ்விதத்திலும் தொடர்புபடாத வடக்கிலுள்ள தமிழ் மக்கள் பாதுகாப்பு என்ற போர்வையில் தொல்லைக்குள்ளாக்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளனார்.

சிறுபான்மையினரைச் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களாகக் காண்பித்து, அவர்களை அடங்கும் வல்லமை கொண்டவர்கள் தாங்கள் தான் என்று காட்டுவதன் மூலம், சிங்கள மக்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர்கள் நம்புகின்றனர் எனவும், அதற்காகவே வடக்கில் இவ்வாறான சம்பவங்கள் நடப்பதாகக் தாம் கருதுகிறார் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

வடக்கில் இதுவரையில்லாத வகையில் குண்டுகள் வெடிப்பதாகவும், கண்டுபிடிக்கப்படுவதாகவும் கூறப்படுவதன் பின்னணி அரசியல் தான் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அதேவேளை, தமது கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அடுத்த சில நாட்களுக்குள் தமது சொத்து விவரங்களை வெளியிடுவார்கள் என்றும் சி.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

வேட்பாளர்களின் சொத்து விவரங்களை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இந்த மாத இறுதிக்கும் அதனை வெளியிடுவதற்கு தீர்மானித்திருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆபிரிக்கர்கள்ட...

வட்ஸ்அப் ஊடாக இவர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்களிடமிருந்து வங்கி கடனட்டைகள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## கருணாவுக்குச்...

மேற்கொள்ள இரண்டு குழுக்கள் அம்பாறை மற்றும் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளன எனப் பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனரத்ன தெரிவித்துள்ளார்.

ஒரே இரவில் 2000 முதல் 3000 படையினரைக் கொன்றார் என வெளியிட்ட கருத்து தொடர்பாக வாக்குமூலம் அளிக்க வருமாறு கருணாவுக்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைப்பாணை விடுத்திருந்தது.

## ஒரு மாகாணத்தை...

குருநாகல் - தலவத்தேகெதர பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு. ஒரு மாகாணத்தை ஒரு தரப்பினர் மாத்திரம் உரிமை கொண்டாடுவது தவறானதாகும். தெற்கில் பிறந்தவருக்கும், வடக்கில் பிறந்தவருக்கும் சமவுரிமை உண்டு.

கர்தினால் மல்கம் ஆண்டகை தொடர்பில் எதிர்தரப்பினர் குறிப்பிட்டுள்ள கருத்து கவலைக்குரியது. மல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசியல்வாதிகளுக்குச் சார்பாக செயற்படவில்லை என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையில் மத பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு தொல்பொருள்கள் காணப்படுகின்றன.

அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்து, கிறிஸ்தவம், மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் உரிமைகள், மரபு வழிக் கலாசாரங்கள் பாதுகாக்கப்படும். இது அரசின் பொறுப்பாகும்.

ஒரு இனத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து தேசியத்தைக் கட்டியெழுப்புவது எமது நோக்கமல்ல. ஜனநாயக ரீதியில் அனைத்து இன மக்களும் ஒன்றினைந்தே நல்லிணக்கத்துடன் செயற்பட வேண்டும்-என்றார்.

## வாக்குச்சீட்டுக்கள்...

லியனகே தெரிவித்துள்ளார்.

20 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், இதுவரை 13 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள், தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு, கம்பகா, களுத்துறை மற்றும் குருநாகல் உள்ளிட்ட மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகளே தற்போது அச்சிடப்பட்டு வருவதாகவும், அரச அச்சகர் கங்கானி லியனகே கூறினார்.

## மகனைத்...

பட்ட தங்களுடைய பிள்ளைகளின் உண்மை நிலையினை வெளிப்படுத்துமாறு கோரி வவுனியாவில் கடந்த 1222 நாட்களைக் கடந்து தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த போராட்டங்களில் கலந்து கொண்டு தனது மகனை தேடி வந்த தந்தை ஒருவர் சுகயீனம் காரணமாக இன்று உயிரிழந்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான விக்னேஸ்வரன் என்பவரை தேடி வந்த செட்டிகுளம் பகுதியை சேர்ந்த திருநாவுக்கரசு (வயது-69) என்ற தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

## சங்கிலி...

தினம் இரவு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 3 பெண்களிடம் அறுக்கப்பட்ட சுமார் 6 பவுண் எடையுடைய தங்கச் சங்கிலிகள், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெண் ஒருவரிடம் அறுக்கப்பட்ட சுமார் 3 பவுண் எடையுடைய ஒரு தங்கச் சங்கிலி மற்றும் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் திருடப்பட்ட ஹங் ரக மோட்டார் சைக்கிள்கள் என்பன சந்தேக நபர்களிடம் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த சகோதரர்களான சந்தேக நபர்கள் இருவரில் மூத்த சகோதரர் கொள்ளை, திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றத்துக்கு 4 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து அண்மையில் விடுதலையாகியவர்.

சகோதரர்கள் இருவரும் இணைந்து அதிகாலை 5.30 மணிக்கும் காலை 6.30 மணிக்கும் இடையில் ஆலயங்கள், வேலைக்குச் செல்வதற்காக வீதிகளில் பயணிக்கும் பெண்களிடம் தங்க நகைகளை அபகரிக்கும் குற்றச் செயலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

தற்போது 4 சங்கிலி அறுப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய நகைகள் சந்தேக நபர்களிடம் கைப்பற்றப்பட்டுள்ளன. திருடப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார்கள்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஹர்ஷா சமரக்கோனின் வழிகாட்டலில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கபில்தாஸ், ரஞ்சி, சேனாரத்ன, கிங்ஸ்லி, மரியசிறி, சிவந்தன் மற்றும் கவியரசன் ஆகியோர் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஈழநாடு
Eelanadu ஊகேஹாடு
24.06.2020 புதன்கிழமை

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## சிறிதரனின் பொருந்தாத பொய்

தமிழ் அரசியல் வாதிகள் பலரும் இப்போது நல்ல நகைச்சுவையாளர்களாவிட்டனர். தேர்தல் என்றவுடன் அவர்களது நகைச்சுவைக்கு பஞ்சமிருப்பதில்லை. இப்படியான நகைச் சுவைகளையெல்லாம் தூக்கிச் சாப்பிடுமளவிற்கு, தமிரசு கட்சியின் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஒரு நகைச்சுவையை தற்போது அவிழ்த்து விட்டிருக்கின்றார். அதாவது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பில் தளபதிகளுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது, நீலன் இருந்திருந்தால் அவர்தான் இதில் விண்ணன் என்று தெவித்ததாக, ஒரு கதையைச் சொல்லியிருக்கின்றார். அவர் அத்தோடு நின்றுவிடவில்லை, இன்னொரு நகைச்சுவையையும் கூறியிருக்கின்றார். அதாவது, விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியர், அன்ரன் பாலசிங்கம், போராட்டம் பின்னடைவை சந்தித்த போதெல்லாம் ராஜதந்திரரீயில் செயற்பட்டு, எங்களை எழ வைத்தவர். அவரைப் போன்றவர்தான் சுமந்திரன். எனவே சுமந்திரன் எங்களுக்குத் தேவை. சுமந்திரனை காதலிப்பது சிறிதரனின் தனிப்பட்ட பிரச்சினை. ஆனால் அதற்காக வரலாற்றை தவறாக சித்தரிக்க முற்படுவது தவறானது.

விடுதலைப் புலிகள் தொடர்பிலும், பிரபாகரன் தொடர்பிலும் இன்று பலரும் பல கதைகளை சொல்லுகின்றனர். பதில் சொல்லுவதற்கு எவரும் இல்லையென்னும் துனிவில், தங்களின் பதவி மோகத்திற்கும், சுயநலத்திற்கும் பிரபாகரனை இரையாக்கின்றனர். தற்போது சிறிதரன் சொல்லும் கதையும் அப்படியான ஒன்றுதான். தமிழில் ஒரு கருத்துண்டு. அதாவது, 'பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்'.

கலாநிதி.நீலன் திருச்செல்வம், 1999இல் கொழும்பில் வைத்து, படுகொலை செய்யப்பட்டார். அவருடைய கொலை தற்கொலை குண்டுத்தாக்குதல் மூலம் இடம்பெற்றிருந்தது. இதற்கு மேல் இது தொடர்பில் விவாதிக்க ஒன்றுமில்லை. இந்தச் சம்பவம் இடம்பெறும் போது, நீலன் திருச்செல்வம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் தலைமையில் இம்பெற்ற தீர்வுத்திட்ட வரைபில், நீலன் திருச்செல்வம் முக்கிய பங்காற்றியிருந்தார். இந்த தீர்வாலோசனை அப்போது 'தீர்வுப் பொதி' என்று அழைக்கப்பட்டது. இந்த தீர்வுப் பொதியை வரைவதில் கலாநிதி. நீலன் திருச்செல்வமும், பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் பிரதான பங்குவகித்தனர். இதன் காரணமாகவே அப்போது சில ஊடகங்கள் இந்தப் பொதியை ஜி.எல் - நீலன் பொதியென்று (GL-Neelan package) வர்ணித்திருந்தது.

ஆனால் இந்த தீர்வுப் பொதியை விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. இது தொடர்பில், 1995 ஒகஸ்டில், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி தலைமை அலுவலகத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. அதில், பாலசிங்கமும் தமிழ்ச் செல்வனும் பங்குபற்றியிருந்தனர். ஜி.எல்– நீலன் தீர்வுப் பொதியை பாலசிங்கம் கடுமையாக ஆட்சேபித்தார். அரசாங்கம் அபத்தமான திட்டமொன்றுடன் நகர்கின்றது. ஒரு புறம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வையும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இராணுவத் தீர்வையும் முன்வைக்கும் அபத்தமான முயற்சியிது. தீர்வுப் பொதியென்னும் போர்வையில், விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் பிரித்தாளலாம் என்னும் தவறான எண்ணத்துடன் அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. நீலன் திருச்செல்வத்தின் தீர்வுப் பொதி முயற்சியை பாலசிங்கத்தின் ராஜதந்திரம் இவ்வாறுதான் எதிர்கொண்டிருந்தது. இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், சந்திரிக்காவின் காலத்தில், பாலா அண்ணனின் பங்கு எங்களை நம்பிக்கையோடு கொண்டுபோனதாகவும், விழும்போது எழ வைத்ததாகவும் வேறு, சிறிதரன் தனதுரையில் குறிப்பிட்டிருக்கின்றார். பாலா, சந்திரிக்காவின் தீர்வுப் பொதியை எப்படி எதிர்கொடார் என்பதைத்தான் மேலே பார்த்தோம். பிரபாகரனை பொறுத்தவரையில், அவர், சந்திரிக்காவின் தீர்வுப் பொதியை, தனிநாடு நோக்கிய விடுதலைப் போராட்டத்திற்கெதிரான ஒரு சூச்சியாகவே கருதினார். அந்த அடிப்படையிலேயே பாலசிங்கம் அதனை ஆட்சேபித்திருந்தார். இதிலிருந்து ஒரு விடயம் தெளிவு. அதாவது, சிறிதரனுக்கு, விடுதலைப் புலிகள் காலத்து விடயங்கள் எதுவுமே தெரியாது. இதனால்தான் அவர் சொல்ல விரும்பிய பொய்யை, அவரால் பொருந்தச் சொல்ல முடியாமல் இருந்திருக்கின்றது.

நீலன் திருச்செல்வத்தின் தீர்வுப் பொதி, சில மாற்றங்களின் பின்னர், 1997 ஒக்டோபரில், சமர்பிக்கப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில்தான், 1999இல், நீலன் திருச்செல்வம் படுகொலைசெய்யப்பட்டார். இன்று நீலன் திருச்செல்வத்தை பிரபாகரன் விண்ணன் என்று கூறியதாக சிறிதரன் கூறுகின்றார். ஒரு வேளை, லக்ஸ்மன் கதிர்காமர் போன்ற அறிவாளிகளை நாங்கள் இழந்து விட்டோமென்றும் பிரபாகரன் தன்னுடைய தளபதிகளுக்குக் கூறியதாகவும் சிலர் கூறக்கூடும். தமிழ் மக்கள் எதைச் சொன்னாலும் தலையாட்டிக் கொண்டிருப்பர், என்பதில், தமிழ் அரசியல்வாதிகள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கின்றனர் போலும். இதற்கு யார் காரணம் - அரசியல்வாதிகளா அல்லது மக்களா?

# நயினாதீவு செல்வதற்கு பாஸ் அனுமதியில் இனப் பாகுபாடு

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இரு முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜுன் 24

நயினாதீவுக்கு செல்வதற்கு சிங்களவர்களுக்கு ஒரு நடைமுறையும் தமிழர்களுக்கு வேறொன்றும் பின்பற்றப் படுகின்றது. இதில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதுடன் அலைக் கழிக்கவும்படுகின்றனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று முன்தினம் இரண்டு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. கொரோனா தொற்று அச்சம் காரணமாக திருவிழாவில் கலந்து கொள்ள மிகச் சொற்பமான பக்தர்களே அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் அனுமதி பெறவேண்டும். பொலிஸ் அனுமதி இல்லாதவர்கள் பயணிக்க முடியாது.

ஆலயத்தில் மக்களை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறையினால், நயினாதீவிற்கு பிற தேவைகளுக்காக செல்பவர்களும், நயினாதீவை சேர்ந்தவர்களும் பெரும் சிரமங்களை சந்தித்து வருகிறார்கள். இவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு சென்று பாஸ் பெற்றே, தங்கள் பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது.

இதேவேளை, தென்னிலங்கையில் இருந்து பேருந்துகளிலும், வாகனங்களிலும் கூட்டம் கூட்டமாக வரும் சிங்கள மக்கள் பாஸ் நடைமுறை எதுவுமின்றி நயினாதீவுக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். நயினாதீவுக்கு செல்ல அவர்களிற்கு கட்டுப்பாடு இல்லாத நிலையில், அவர்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கும் எந்தக் கட்டுப்பாடுமின்றி சென்று திரும்புகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

பாரபட்சமாக நடைமுறைப்படுத்தப்படும் பாஸ் நடைமுறைக்கு எதிராக புங்குடுதீவு, நயினாதீவை சேர்ந்த இருவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# தேர்தலின் பின்னர் மக்களின் கருத்தை அறிந்தே தீர்மானங்களை எடுப்பராம்!

### கூட்டமைப்பின் நிர்மலநாதன் சொல்கிறார்

மன்னார், ஜுன் 24

நாடாளுமன்ற தேர்தலின் பிற்பாடு மக்களின் கருத்துக்களை அறிந்து ஒவ்வொரு தீர்மானங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் என்று கூறியிருக்கிறார் அந்தக் கட்சியின் முன்னாள் எம்.பியும் - வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுபவருமான சார்ள்ஸ் நிர்மலநாதன்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் அலுவலகத்தில் அவர் நேற்று நடத்திய சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.




மேலும், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் தமிழ் மக்கள் தனித்துவத்தை நிலை நாட்ட வேண்டிய ஒரு தேர்தலாக அமைந்துள்ளது.

தனித்துவத்தின் அடிப்படையில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை ஒரு குழுவாக தனிப்பட்ட நபருக்கு அப்பால் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் குழு, புலம் பெயர்ந்த நாடுகளில் இருக்கின்ற அமைப்புக்களை உள்ளடக்கிய ஒரு குழுவாக இயங்கி நாங்கள் முழுமையாக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸலைப் பயன்படுத்த வேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் பேரவை என்பது வெறுமனே தற்செயலாக உருவாகியது இல்லை.

நீண்ட காலமாக தமிழர்களுடைய விடுதலைக்காக அது ஜனநாயக போராட்டமாக இருக்கலாம், ஆயுதப்போராட்டமாக இருக்கலாம், ஆயுதப் போராட்டத்தின் பிற்பாடு தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு விடையமாக எங்களுடைய மக்கள் இலங்கையில் கௌரவமாக வாழக்கூடிய வகையில் வகிபாகங்களை செய்யக்கூடிய வகையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இருக்கின்ற தீர்மானத்தை முழுமையாக ஒற்றுமையாக பயன்படுத்தி நாங்கள் எங்களுடைய மக்களினுடைய தீர்வை வெண்றெடுக்க வேண்டும்.

அதற்கு தமிழ் மக்கள் ஒரே அணியின் கீழ் செயல்பட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்தி எதிர் காலத்தில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையை நாங்கள் ஒரு குழுவாக பயன்படுத்திச் செல்ல வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தற்போது மூன்று கட்சிகள் இருக்கின்றன. இதில், ஒரு சில நபர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்களாக இருந்தாலும் எக்காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய முடிவுகள் தமிழ் மக்களுக்கு எதிரானதாக அமைந்தது இல்லை. மக்கள் நலன் சார்ந்த முடிவுகளே. அந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இருந்த வளங்களை பயன்படுத்தி மக்கள் நலன் சார்ந்த முடிவுகளையே எடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முன் வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் என்பது தேர்தல் அரசியல் நோக்கம் கொண்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் அரசியல் செய்ய முடியாதவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், மக்களையும் பிரிக்க நினைக்கின்றவர்கள்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு பலமான அணியாக எதிர்காலத்தில் இல்லாது விட்டால் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். நாடாளுமன்ற தேர்தலின் பிற்பாடு மக்களினுடைய கருத்துக்களை அறிந்து ஒவ்வொரு தீர்மானங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கின்றபோது மக்களின் தீர்மானங்களை அறிந்து தான் முடிவுகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

செய்திகள்






# தேர்தல் வாக்குகள் எண்ணும் ஒத்திகை யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

2020 பொதுத் தேர்தலுக்கான வாக்குகள் எண்ணும் ஒத்திகை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகி இடம்பெற்றது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், கிளிநொச்சி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் இந்த வாக்கு எண்ணும் ஒத்திகை நடைபெற்றது.

கொவிட் -19 நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் சுகாதார அமைச்சின் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி பொதுத் தேர்தல்



வாக்குகளை எண்ணும் பணியை முன்னெடுப்பது பற்றி இந்த ஒத்திகை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் ஒத்திகை ஆரம்பமானது.

இதேவேளை, வாக்கெடுப்பு ஒத்திகை கடந்த வாரம் நாவாந்துறை பாடசாலையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்-மோ. சைக்கிள் விபத்தில் குடும்பத்தலைவர் உயிரிழப்பு!

## யாழ்.நகரில் நேற்று துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மினி பஸ்-மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாலி வீதி - பருத்தித்துறை வீதி இணையும் சிறாம்பியடிச் சந்தியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

பண்டத்தரிப்பு, பற்றிமா வீதியைச் சேர்ந்த அருளப்பு லோகு (வயது-50 ) என்ற பாதுகாப்பு உத்தியோகத்தரே உயிரிழந்தார்.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் பொறியியல் பீடம், தொழில்நுட்ப பீடம் மற்றும் விவசாய பீடத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களை யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றிச் செல்லும் மினிபஸ்ஸே விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பத்தலைவர் யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலைக்கு ஏற்றிச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# அமெரிக்காவில் இருந்து 217 பேர் திரும்பினர்!

கொழும்பு, ஜூன் 24

அமெரிக்காவில் சிக்கியிருந்த 217 இலங்கையர்கள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று அதிகாலை 4.47 மணிக்கு வந்தடைந்தனர்.

அவர்களுக்கு விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# முகமாலையில் துப்பாக்கிச்சூடு இராணுவத் தளபதி மௌனம்!

கொழும்பு, ஜூன் 24

முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து இப்போது எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

முகமாலையில் கடந்த சனிக்கிழமை மாலை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டார்.

சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டவர்களுடன் தொடர்புடைய இந்த இளைஞன், இராணுவத்தினரை மோதிவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டபோதே, சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்புத் தரப்பு தகவல் வெளியிட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து முழு அளவிலான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பிரதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே, இராணுவத் தளபதி இந்தச் சம்பவம் குறித்து இப்போது எந்தத் தகவலையும் வெளியிட முடியாது எனக் கூறியுள்ளார்.

முகமாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரின் விசாரணையும் பொலிஸ் தரப்பின் விசாரணையும் நடந்து வருவதாகவும், எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் இப்போது எதுவுமே கூற முடியாது என்றும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளார்.

# குற்றம் இழைத்தவர் நாட்டை ஆளும் துர்ப்பாக்கிய நிலை



## மாவை சேனாதிராசா விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

சர்வதேச குற்றம் இழைத்தவர் நாட்டை ஆட்சி செய்யும் துர்ப்பாக்கிய நிலைக்குள் நாங்கள் இருக்கின்றோம் என இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

சுழிபுரம், தொல்புரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவத்தைச் சிவில் நிர்வாகத்தில் நியமிப்பது ஏற்புடைய விடயம் அல்ல. சர்வதேசக் குற்றம் இழைத்தவர் நாட்டை ஆட்சி செய்யும் துர்ப்பாக்கிய நிலைக்குள் நாங்கள் இருக்கின்றோம். இத்தகைய நிலையில் எமது பிரதிநிதித்துவம் அதிகமாகக் கிடைக்க கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டும்.

தமிழ் மக்களுக்காகச் செயற்படும் கட்சி ஆகையால் தான் எங்கள் மீது குற்றம் சாட்டுகிறார்கள். நாங்கள் மக்களுக்காகத்தான் வேலை செய்பவர்கள். ஏனையவர்களைப் போல் சமூக விரோதச் செயலில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள் அல்லர், மக்களுக்காகப் போராடியதால் தான் சிறை சென்றவன். மக்களுக்காகச் செயலாற்றுகின்றவர்கள் தான் எம்முடன் இருக்கிறார்கள். எனவே நாங்கள் எமது தேசிய விடுதலையை அடையக் கூட்டமைப்புக்கு மக்களாகிய நீங்கள் வாக்களித்து வெற்றியடைய வைக்கவேண்டும்.

இன்று உங்களைச் சந்திப்பது தேர்தலுக்கான கூட்டமல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பத்துப் பேரை வேட்பாளர்களாக நியமித்துள்ளோம். உங்களுக்கு உங்கள் பிரதேசத்தில் செயற்படுகின்ற மூவரை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்-என்றார்.

# கருணா மீது நடவடிக்கை எடுங்கள்!



## சோபித தேரர் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் பிரதி அமைச்சர் கருணாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி தேசிய புத்திஜீவிகள் சபையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

ஆனையிறவில் ஒரே இரவில் 2000, 3000 இராணுவத்தினரைத் தான் கொன்றார் என தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கருணா வெளியிட்டிருந்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், கருணாவிடம் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று கோரி, தேசிய புத்திஜீவிகள் சபையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் மற்றும் மேற்படி அமைப்பின் உறுப்பினர்கள் நேற்று முன் தினம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர்.

விளையாட்டுச் செய்திகள்



# லா லிகா உதைபந்தாட்டம் முதலிடத்தில் ரியல் மட்ரிட்

மட்ரிட், ஜூன் 24

ரியல் மட்ரிட் அணி, 2:1 என்ற கோல் கணக்கில் ரியல் சொசிடொட் அணியை வீழ்த்தியது. இதன் மூலம் புள்ளிப் பட்டியலில் அந்த அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

20 கழகங்களுக்கு இடையிலான லா லிகா உதைபந்தாட்டத் தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் 33 முறை சம்பியனான ரியல் மட்ரிட் கிளப், ரியல் சொசிடொட் அணியை எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தொடக்கம் முதலே கோல் அடிக்க தீவிரம் காட்டினாலும் முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை.

50 ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்கு பெனால்டி வாய்ப்புக் கிடைத்தது. அதனைப் பயன்படுத்தி அந்த அணியின் கப்டன் செர்ஜியோ ரேமோஸ் அபாரமாகக் கோல் அடித்தார்.

இந்த சீசனில் அவர் அடித்த 9 ஆவது கோல் இதுவாகும். இதன் மூலம் லா லிகா போட்டி வரலாற்றில் அதிக கோல்கள் (68 கோல்கள்) அடித்த பின்கள வீரர் என்ற பெருமையை செர்ஜியோ ரேமோஸ் தனதாக்கினார். இதற்கு முன்பு பார்ஸிலோனா கழக அணியை சேர்ந்த ரொனால்ட் கீமான் பின்கள வீரராக விளையாடி 67 கோல்கள் அடித்ததே அதிகபட்சமாக இருந்தது.

70-வது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி 2 ஆவது கோலை அடித்தது. அந்த அணியின் கரிம் பென்ஜிமா இந்த கோலை அடித்தார். ஆனால் பந்து அவரது கையில்பட்டு போனதாகவும், அது கோல் இல்லை என்று எதிரணியினர் நடுவரிடம் முறையிட்டனர். இதனை அடுத்து காணொலியை ஆய்வு செய்த நடுவர் கோல் தான் என்று அறிவித்தார். பென்ஜிமா இந்த சீசனில் அடித்த 17 ஆவது கோல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து 83 ஆவது நிமிடத்தில் ரியல் சொசிடொட் அணி பதில் கோல் அடித்தது. அந்த அணியின் மிகெல் மெரினோ இந்தக் கோலை அடித்தார். அதன் பிறகு இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. முடிவில் ரியல் மட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கொரோனா பாதிப்பால் தடைப்பட்டு போட்டி தொடங்கிய பிறகு ரியல் மட்ரிட் அணி தொடர்ச்சியாக பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும்.

30-வது ஆட்டத்தில் ஆடிய ரியல் மட்ரிட் அணி 19 வெற்றி, 8 சமன், 3 தோல்வியுடன் 65 புள்ளிகள் பெற்று புள்ளி பட்டியலில் 2 ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறியது.

நடப்பு சம்பியனான பார்ஸிலோனா அணி 30 ஆட்டங்களில் ஆடி 20 வெற்றி, 5 சமன், 5 தோல்வியுடன் 65 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் இடத்தில் இருந்து 2 ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. இரு அணிகளும் சமபுள்ளிகள் பெற்றாலும் கோல் வித்தியாசத்தின் அடிப்படையில் ரியல் மட்ரிட் அணி முதலிடத்தை பிடித்துள்ளது.

# அவுஸ்திரேலிய வீரர்கள் ஐ.பி.எல்லில் ஆட ஆர்வம்



சிட்னி, ஜூன் 23

ஐ.பி.எல். தொடரில் அவுஸ்திரேலிய வீரர்கள் பங்கேற்பார்கள் எனத் தெரிவித்துள்ளார் அந்த அணியின் அதிரடி ஆட்டக்காரரான டேவிட் வோர்ணர்.

ஐ.பி.எல்லில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியை வழிநடத்தும் அவர் அளித்த நேர்காணல் ஒன்றில் தெரிவித்ததாவது,

திட்டமிட்டபடி ரி-20 உலகக் கிண்ணத் தொடர் நடப்பது சந்தேகம். ஆனால், இதே காலத்தில் ஐ.பி.எல். போட்டி நடத்தப்பட்டால் ஏலத்தில் எடுக்கப்பட்ட அனைத்து அவுஸ்திரேலிய வீரர்களும் பங்கேற்பர்.

இந்த ஆண்டு இறுதியில் இந்திய அணி எங்கள் நாட்டிற்கு வந்து 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. இந்தத் தொடரின் போது நாங்கள் இந்திய கப்டன் விராட் கோலியை வேண்டுமென்றே கோபமூட்டும் செயலில் ஈடுபட மாட்டோம். தேவையில்லாமல் அவரை சீண்டினால் அது இன்னும் அவரை சிறப்பாக செயல்பட தூண்டும் என்பதை அறிவோம்.

ரசிகர்கள் இல்லாத மைதானத்தில் விளையாடுவது புதுமையான அனுபவமாக இருக்கும். அவுஸ்திரேலிய அணியில் தெரிவு செய்யப்பட்டு இந்த தொடரில் களம் காண வேண்டும் என்று விரும்புகிறேன். கடந்த முறை நாங்கள் அப்படி ஒன்றும் மோசமாக விளையாடி விடவில்லை. சிறந்த அணியால் (இந்திய அணி) தோற்கடிக்கப்பட்டோம். அவர்களது பந்து வீச்சு அபாரமாக இருந்தது. தற்போது இந்திய அணி சிறப்பான துடுப்பாட்ட வரிசையை கொண்டிருக்கிறது. அதே சமயம் எங்களது பந்து வீச்சாளர்கள் இந்திய துடுப்பாட்டக்காரர்களுக்குத் தாக்குதல் தொடுக்க தீவிரம் காட்டுவார்கள். இதைக் காண இந்திய ரசிகர்கள் ஆவலுடன் இருப்பார்கள் - என்றார்.

# இந்தியா - பாகிஸ்தான் தொடரை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## ஆசையை வெளிப்படுத்தினார் மலிக்



இஸ்லாமாபாத், ஜூன் 24

இங்கிலாந்து - அவுஸ்திரேலியாவின் ஆஷஷ் தொடருக்கு நிகராகப் பார்க்கப்படும் பாகிஸ்தான் - இந்தியா கிரிக்கெட் தொடர் மீண்டும் நடக்க வேண்டும் என்று கோரியுள்ளார் சொஹைப் மலிக்.

பாகிஸ்தானுடனான எல்லைப் பிரச்னை மோதலால் இந்தியா அந்நாட்டுடன் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க மறுத்து வருகின்றது.

இந்நிலையில், இதுகுறித்து கருத்து வெளியிட்ட மலிக், “ஆஷஷ் உலக கிரிக்கெட்டுக்கு தேவை என்ற போதிலும், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான இரு நாட்டு தொடர் மீண்டும் தொடங்குவதும் உலகிற்கு மிகவும் தேவை என்று நினைக்கிறேன்.

“ஆஷஷ் தொடர் இன்றி இங்கிலாந்து - அவுஸ்திரேலியா இடையிலான டெஸ்ட் தொடரை நினைத்து பார்க்க முடியுமா?. இரண்டு தொடரும் ஒரு மாதிரியான பேரார்வம் மற்றும் சிறந்த வரலாற்றுடன் விளையாடப்படுவது. அதனால் தற்போது நாம் விளையாடாமல் இருப்பது அவமானம்.

“இந்திய கிரிக்கெட் வீரர்களை மரியாதையுடன் பேசும் நண்பர்கள் எனக்கு உண்டு. அதேபோல் இந்தியாவில் விளையாடும்போது எனக்கும், பாகிஸ்தான் வீரர்களுக்கும் ரசிகர்கள் உள்ளனர். அதனால் இந்த நட்பை மீண்டும் பார்க்க விரும்புகிறேன்” என்றார்.



# 3 பாகிஸ்தான் வீரர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

இஸ்லாமாபாத், ஜூன் 24

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களில் மூவருக்கு கொரோனா தொற்று இருப்பது பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தான் அணி கிரிக்கெட் பயணமாக இங்கிலாந்து செல்லவுள்ளது. அதற்காக நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே இது தெரிய வந்தது.

ராவல்பிண்டியில் நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில், அந்த அணியின் ஹைதர் அலி (துடுப்பாட்ட வீரர்), ஹரிஸ் ரப் (பந்து வீச்சாளர்), ஷதிப் கான் (பந்து வீச்சாளர்) ஆகியோருக்கே கொரோனா தொற்று இருப்பது உறுதியானது.

தொற்று உறுதி செய்யப்பட்ட வீரர்கள் மூன்று பேருக்கும் வைரஸ் தொடர்பான எந்த அறிகுறிகளும் இல்லை எனவும், அறிகுறிகள் இல்லாமலேயே அவர்களுக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதையடுத்து, கொரோனா உறுதி செய்யப்பட்ட வீரர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

செய்திகள்

# மதத் தலைவரை அவமதிப்பது ஒருவரது வீழ்ச்சியின் ஆரம்பம்

## கூறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஜூன் 24

எந்தவொரு மதத்தையோ அல்லது மதத் தலைவரையோ அவமதிப்பது வீழ்ச்சியின் ஆரம்பம் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன் தின்இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் குழு விழிப்புணர்வுடன் செயற்படுகிறது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

இன்று ஐக்கிய தேசியக்கட்சி, பிளவடைந்து காணப்படுகின்றது. அதாவது ஒருபுறம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுடனான பிரிவு, மறுபுறம் ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உடனான பிரிவு, மாறி மாறி தங்களுக்குள் தொடர்ந்து முரண்பட்டு கொண்டிருக்கின்றன.

இவைகளைப் பார்க்கும்போது, இவர்கள் வீழ்ச்சியை நோக்கி நகர்ந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய செயற்பாட்டினால் அவர்கள், தங்கள் வாக்குகளின் எண்ணிக்கையை மட்டுமே குறைக்கிறார்கள். எந்த வகையிலும் அதிகரிக்கவில்லை என்பதை என்னால் காண முடிகிறது.

இதேவேளை ஒரு உறுப்பினர், கொழும்புப் பேராயரை மிகவும் மோசமான முறையில் அவமதித்ததாக நான் கேள்விப்பட்டேன்.

இவ்விடயம் தொடர்பாக எனது கருத்து என்னவென்று ஒருவர் கேட்டார். அதற்கு நான் கூறினேன், கத்தோலிக்கம் அல்லது வேறு எந்த மதமாக இருந்தாலும், ஒரு மதத் தலைவரை யாராவது அவமதித்தால், அது அவருடைய வீழ்ச்சியின் ஆரம்பம்

அது மட்டுமல்லாமல், அவருடைய கட்சியின் வீழ்ச்சிக்கும் அது ஒரு காரணமாக அமையும்-என்றார்.

# சு.கவிலிருந்து விலகுகிறார் நிஷாந்த முத்துஹெட்டிகம

கொழும்பு, ஜூன் 24

முன்னாள் அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம சுதந்திரக்கட்சியில் வகித்த அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலக முடிவு செய்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட அவருக்கு சு.க. வாய்ப்பளிக்கவில்லை. இதை யடுத்து எழுந்த அதிருப்தியினால் இந்த முடிவை எடுத்துள்ளார்.

அவர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இணையவுள்ளார்.

# கருணாவுக்கு எதிராக இப்போது நடவடிக்கை எடுப்பது தவறானது

## சொல்கிறார் அனந்தி சசிதரன்



கொழும்பு, ஜூன் 24

கருணாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோருவது தமிழ் இனம் தன்னைப் பாதுகாப்பதற்காக நடத்திய ஆயுதப் போராட்டத்தை பிழையாகக் காட்டுவதாகும் என அனந்தி சசிதரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கருணாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்பது புனர்வாழ்வு பெற்ற, பெறாத அல்லது ஆயுதப்போராட்டத்துக்கு ஆதரவளித்த எல்லோருடைய மனங்களையும் கலங்கடிக்கும் நிலையை ஏற்படுத்தியது.

கருணா கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் அமைப்பின் ஒரு தளபதியாக இருந்தார். அவருடைய துரோகம் ஓர் இனம் அழிவதற்கு வழிகோலி விட்டது. அதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் காலத்தில் கருணா தளபதியாக இருந்து, 3000 இராணுவத்தைக் கொன்றேன் எனக் கூறியதற்கு நடவடிக்கை எடுப்பது என்பது ஒரு இனம் தன்னைப் பாதுகாப்பதற்கு ஆயுதம் ஏந்தியதைப் பிழையாகக் காட்டுவதாக இருக்கும்.

மக்களைப் பாதுகாக்கவே புலிகள் ஆயுதங்களை ஏந்தினார்கள். பாதுகாப்புப் படைக்கு எதிராக யுத்தத்தை நடத்தினார்கள். கடந்த காலத்தில் இராணுவத்தைக் கொன்றதற்காக தற்போது நடவடிக்கை எடுப்பது என்பது பிழையான ஒன்று-என்றார்.

# வெலிசறை கடற்படைத்தளம் நேற்று மீளத் திறக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 24

இரண்டரை மாதங்களின் பின்னர் வெலிசறை கடற்படைத் தளம் நேற்று மீளத் திறக்கப்பட்டுள்ளது.

ஜா எல பகுதியில் போதைப் பழக்கமுடையவர்களிடையே கொரோனா தொற்று பரவியதையடுத்து, அவர்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்ட வெலிசறை கடற்படையினர் பெருமளவில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். இதனால் முகாமை மூட வேண்டியேற்பட்டது.

இரண்டரை மாதங்களின் பின்னர் சுகாதாரத்துறை அதிகாரிகள் பரிசோதனை மேற்கொண்டு, முகாமில் தொற்று அபாயமில்லையென உறுதி செய்ததை தொடர்ந்து நேற்று முகாம் மீளத் திறக்கப்பட்டது.

# 9 மாணவர்கள் கைது!

களனி பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனி பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி. கமெராக்களை நீக்கியமைக்காகவே நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# 7 இலட்சத்து 50ஆயிரத்து 85 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி

கொழும்பு, ஜூன் 24

2020 பொதுத் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பில் 47 ஆயிரத்து 430 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பிற்கு 7 இலட்சத்து 53 ஆயிரத்து 37 விண்ணப்பங்கள் கிடைத்தபோதும் அதில் 7 இலட்சத்து 50 ஆயிரத்து 85 பேரே தபால் மூலமான வாக்களிப்புக்கு தகுதி பெற்றனர் என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தபால் மூலமான வாக்களிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு 74 ஆயிரத்து 611 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

தபால் மூலமான வாக்களிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இரண்டாவது மிக அதிகமானவர்கள் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அங்கு 56 ஆயிரத்து 438 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, வாக்களிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மூன்றாவது மிக அதிகமானவர்கள் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அங்கு 54 ஆயிரத்து 98 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# வைத்தியசாலைக்கு இராணுவப் பாதுகாப்பு கோரிக் கடிதம் எழுதிய வைத்திய அதிகாரி!

கிளிநொச்சி, ஜூன் 24

அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு இராணுவத்தின் பாதுகாப்பைக் கோரி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் கிளிநொச்சிப் படைகளின் தளபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

19-06-2020 திகதியிடப்பட்டு கிளிநொச்சிப் படைகளின் தளபதிக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் 'அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் பாதுகாப்புக்கு இராணுவத்தினர் தேவை' எனக் கோரப்பட்டுள்ளது.

'கொரானா வைத்தியசாலையாக மாற்ற எத்தனிக்கப்படும் அக்கராயன் வைத்தியசாலையிலிருந்து கொரோனா நோயாளர்கள் வெளியேறுவதனை தடுப்பதற்கும், மற்றும் பிரதேச மக்களிடமிருந்து வைத்தியசாலைக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுப்பதற்குமாக' இராணுவத்தினரது பாதுகாப்புக் கோரப்பட்டுள்ளதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத சுகாதாரத் துறை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

அக்கராயன் மருத்துவமனையானது கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதும் கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளரது ஆளுகை அவரது வைத்தியசாலை எல்லைக்குள் மட்டுமே என்பதையும் சுகாதாரத்துறை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

இருந்தும் மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் கடிதம் எழுதியிருப்பது அதிர்ச்சியளிப்பதாக வைத்தியத்துறை அதிகாரிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

'அக்கராயன் மருத்துவமனையை கொரோனா வைத்தியசாலையாக மாற்றாது பொருத்தமான வைத்தியசாலை ஒன்றை தெரிவு செய்யுமாறும், அக்கராயன் வைத்தியசாலையில் இடம்பெற்று வருகின்ற மருத்துவ சேவையினை நிறுத்த வேண்டாம் எனவும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் பிரதேச மக்கள், 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நம்பியிருக்கின்ற முழுமையான பயன்பாட்டில் உள்ள வைத்தியசாலையினை அவ்வாறே இயங்க விடுமாறும் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அண்மையில் அக்கராயன் மருத்துவமனையில் இடம்பெற்ற பொதுமக்களுடனான சந்திப்பின்போது, 'இங்குள்ள யாரோ ஒரு அதிகாரிதான் அக்கராயன் வைத்தியசாலையைப் பரிந்துரைத்திருக்க வேண்டும்" என நேரடியாக அங்கிருந்த சுகாதார திணைக்கள அதிகாரிகளின் முகத்திற்கு நேரே மக்கள் பிரதிநிதிகள் குற்றம் சாட்டியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது

பாகம் – 25

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

தொடர்ந்து மகிழடித்தீவு ஆஸ்பத்திரி விடுதியில் தங்கியிருக்கும் ஒருவரைச் சந்திக்கச்சென்றார். இவரும் அந்த இறால் பண்ணையில் பணியாற்றுபவர். "தாங்களே கொள்ளையடித்து விட்டு எதுவும் தெரியாதது மாதிரி உங்களிடம் சொல்கிறார்கள். இவர்கள் தமக்கிடையே ஒருவருக்கொருவர் காக்கா, கடவுள், காந்தன் என்றெல்லவா அழைத்துக் கொண்டார்கள்" என்று சொன்னார் இவர்.

"கொள்ளையர்கள் எவரும் இந்தப் பகுதிக்குப் பரிச்சயம் இல்லாதவர்கள். இதேவேளை இக் கொள்ளைச் சம்பவத்தில் இறால் பண்ணைத் தொழிலாளர் ஒருவருக்குப் பங்கிருக்கிறது. இருட்டில் மறைந்திருந்தே அவர் எங்கெங்கு என்னென்ன பொருட்கள் உள்ளன என அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு இருந்தார்", எனவும் இவர் மேலும் குறிப்பிட்டார். தொடர்ந்து விசாரித்ததில் கொள்ளையர்களுக்கு உதவிய பணியாளர் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆதரவாளர் என்றும் புளியந்தீவைச் சேர்ந்த அவர் நிறுவனத்துக்குச் சொந்தமான மினி பஸ்ஸில் கடமைக்கு வருபவர் எனவும் அவரது பெயரையும் சொன்னார்.

சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அன்று பிற்பகல் மட்டு. நகரிலிருந்து வரும் மினி பஸ்ஸூக்காக மகிழடித்தீவுச் சந்தியில் காத்திருந்தார் பசீர். அது வந்ததும் அதனை மறித்தார். குறிப்பிட்ட பணியாளரின் பெயரைச் சொல்லி அவரைக் கீழே இறங்குமாறு கூறினார். எவரும் இறங்கவில்லை. எனவே ஒவ்வொருவரது அடையாள அட்டைகளையும் வாங்கிப் பார்க்கத் தொடங்கினார். உடனே சம்பந்தப்பட்டவர் தானாக எழும்பி நின்றார். நிமிர்ந்து பார்த்த பசீரிடம் தனது பெயரைச் சொன்னார். "சரி கீழே இறங்குங்கள்", என்றார் பசீர். அவ் வேளை மினி பஸ் சாரதி, "மட்டக்களப்பிலிருந்து எனது வாகனத்தில் வரும் அனைவருக்கும் நான்தான் பொறுப்பு. நீங்கள் வந்து வெள்ளைக்காரரிடம் சொல்லி விட்டு இவரைக் கூட்டிக் கொண்டு செல்லுங்கள்", என்றார்.

அதனையேற்று இறால்பண்ணைக்குச் சென்ற பசீர் மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் வெள்ளைக்காரரிடம் சொல்லி விட்டு அவரை அழைத்துச் சென்றார்.

**சவக்காலையில் தானாகவே வெளிவந்த உண்மை!**

பசீர் கூட்டிச் சென்ற இடம் முனைக்காட்டிலிருந்த சவக்காலை. அங்கே அவரை ஓரிடத்தில் இருக்கச் சொன்னார். அங்கு இருவர் குழி தோண்டிக்கொண்டு இருந்தனர். அதைப் பார்த்ததும் அவருக்கு முழி பிதுங்கியது. கண்கள் கலங்கின. குழி வெட்டியோரில் ஒருவர் வந்து "ஆழம் போதுமா?" எனப் பசீரைக் கேட்டார். தான் கூட்டிக்கொண்டு போனவரைத் தலையிலிருந்து கால் வரை பார்த்த பசீர். "இன்னும் கொஞ்சம் நீளமாக வெட்டுங்கள்", என்றார். அவ்வளவுதான் - அதுவரை விம்மிக்கொண்டிருந்தவர் ஓங்கிப் பெருங்குரலெடுத்து அழுததுடன் கொள்ளை எப்படி நடந்தது என்று சொன்னார்.

எத்தனை பேர் வந்தனர், என்ன என்ன பொருட்களைக் கொள்ளையடித்தனர் என்ற விபரங்களுடன் தான் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆதரவாளர் என்றும் கடகடவெனச் சொல்லிக்கொண்டு போய் இறுதியில் தன்னைச் சுட்டுவிடாதீர்கள் என்று கெஞ்சினார். எந்த விசாரணைக்கோ மேலதிக கேள்விக்கோ அவசியமில்லாமல் போய் விட்டது. குழி வெட்டியவர்களுடன் அவரை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு முதலைக்குடாவுக்குச் சென்றார் பசீர். அங்கே காலையில் சந்தித்த குணமும், பின்னாளில் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் நிதி அமைச்சராக விளங்கியவருமான கிருபாகரனும் இருந்தார். அவர்களிடம் பசீர் "இரவு கொள்ளையடித்தவர்களில் ஒருவரைப் பிடித்து விட்டோம். எனக்குத் தெரியும் இது புளொட்தான் செய்ததென்று. காக்கா, கடவுள், காந்தன் என்று ஒருவரையொருவர். அழைத்ததன் மூலம் எங்கள் இயக்கத்தின் மீது பழியைச் சுமத்தியவர்களை நாங்கள் சும்மாவிட முடியாதுதானே? இப்போது பிரச்னை என்னவென்றால் அவர் தான் ஈ.பி. ஆர். எல்.எவ். என்கிறார். எதற்கும் அவரை ஒரு தடவை வந்து பாருங்கள்", என்றார். இருவரும் பசீருடன் முனைக்காடு சவக்காலைக்குச் சென்றனர்.

அங்கே குழி வெட்டப்பட்டிருப்பதையும் பீதியுடன் நின்றவரையும் கண்டனர். மீன் முள்ளுச்சிக்கிய பிராமணனின் நிலை அவர்களுக்கு. விழுங்கவும் முடியாது. வெளியில் சொல்லவும் இயலாது. சவக்காலைக்கு வெளியிலேயே நின்று கொண்டார் பசீர். இருவரும் உள்ளே போய் விடயத்தைக் கேட்டனர். பின்னர் தயங்கித் தயங்கி வந்தனர். "தோழர்! இவர் எங்களுடைய தோழர்தான். நகரத்திலுள்ள தோழர்கள் எமக்குத் தெரியாமல் வந்து இதனைச் செய்து விட்டனர்", என்றனர்.

"சரி! இவர்கள் வேண்டுமென்றே எங்களில் பழி சுமத்தத்தானே காக்கா, கடவுள், காந்தன் எனக் கூறினர். இதனை மன்னிப்பது சிரமந்தானே? உங்களோடும் நான் நன்றாகப் பழகிவிட்டேன். ஒன்று செய்யலாம் - இவர் நேரே வெள்ளைக்காரரிடம் போய் கொள்ளையைச் செய்தது ஈ.பி.ஆர்.எல்.எவ்தான் என்றும் புலிகளுக்கு இதில் சம்பந்தம் இல்லை எனவும் சொல்ல வேண்டும்", என்றார் பசீர்.

உடனே தலையாட்டினர். குணமும் கிருபாகரனும். வெள்ளைக்காரரிடம் அப்படியே சொன்னார் அந்தப் பணியாளர். அவ்வேளை பசீர் "அவர்கள் ஆயுதமுனையில் மிரட்டித்தான் தமது கொள்ளைக்கு உதவவேண்டும் என்றார்கள். இவரும் பயத்தில் சம்மதித்து விட்டார். தயவு செய்து இவரைப் பணியிலிருந்து நீக்கி விடாதீர்கள். இவரை நம்பித்தான் இவரது குடும்பம் இருக்கிறது", என்றார். உண்மையில் இவரிடம் எந்தக் கேள்வியோ விபரத்தையோ கேட்டிருக்கவில்லை பசீர். வெள்ளைக்காரர் சம்மதித்தார்.

அடுத்த நாள் சிவாத் தோழர் என்பவர் முதலைக்குடாவுக்கு வந்தார். அவர்தான் தமது பொறுப்பாளர் என குணம் அறிமுகப்படுத்தினார். இறால் பண்ணை விவகாரத்தில் தமது பக்கம் தவறு இருந்ததை அவர் ஒப்புக்கொண்டார். அவர் போய்ச் சில நாட்களில் "காக்கா, கடவுள், காந்தன் என இவர்கள் மட்டுமா பெயர் வைக்க முடியும்? நாங்கள் வைக்கக் கூடாதா? என சில ஈ.பி. ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் புலிகள் உறுப்பினரிடம் கேட்டனர். தலை இருக்க வால் ஆடுகிறது என நினைத்துக் கொண்டனர் புலிகள்.



பிரபா, பாலகுமார்

● ● ●

**ஈ.பி. சுதாவைக் காப்பாற்றிய புலி ஆதரவாளர்!**

முனைக்காடு என்றதும் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். பின்னாளில் செங்கலடியில் 16/09/1985 அன்று அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானார் புலிகள் இயக்க உறுப்பினர் மைக்கல் (நல்லையா பாரதிதாசன்). இவரது மாமன் ஏறாவூரைச் சேர்ந்த சுதா. ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினரான இவர் அதிரடிப்படையினரால் கைதானார். வீரதுங்கா என்ற அதிகாரியினால் இவர் மோசமான சித்திரவதைக்குள்ளானார். காலில் ஒரு விரலையும் இழந்தார். இவரைத் தீவிரவாத இளைஞர்களைக் காட்டச் சொல்லி அதிரடிப் படையினர் முனைக்காட்டுக்குக் கொண்டு வந்தனர். அங்கு வந்து சேர மாலையாகி விட்டது. வாகனத்தில் இவரை மட்டும் விட்டு விட்டு சகல படையினரும் தேடுதலுக்குப் புறப்பட்டனர்.

வாகனத்திலிருந்து இறங்கித் தவழ்ந்து வந்த சுதாவை புலிகளின் தீவிர ஆதரவாளரும், பின்னர் மாவீரரான ஒருவரின் சகோதரருமான ஒருவர் கண்டார். சுதாவைத் தோள்மேல் வைத்துத் தூக்கிக் கொண்டு ஓடிப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு வந்தார். இரவாகி விட்டதால் இவர்களைத் தேட முடியவில்லை அதிரடிப் படையினரால். மேலதிகமாக ஆட்களைப் பிடிக்க வந்தவர்கள் கையில் கிடைத்தவரையும் இழந்த நிலையில் திரும்பினர். சில நாட்களின் பின் சித்தாண்டியில் வைத்து மீண்டும் படையினரிடம் சிக்கினார் சுதா. காலில் காயம். முறையான வைத்தியம் கிடைக்காததால் ஒரு காலை இழந்தார்.

சுதாவுக்கு சுவிஸ் நாடு அரசியல் அடைக்கலம் கொடுத்தது. இவர் அங்கேயே வாழ்ந்து வருகிறார். இவரைச் சித்திரவதைக்குள்ளாக்கிய அதிரடிப்படை அதிகாரி வீரதுங்கா 03.04.1985 அன்று கொடுவாமடுவில் நிகழ்ந்த கண்ணி வெடித் தாக்குதலில் பலியானார். பெருந்தொகையான படையினர் பலியான இத் தாக்குதலை ஈரோஸ் மேற்கொண்டது. கோப்பாவெளிப் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்டு விட்டுத் திரும்புகையிலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சுற்றிவளைப்பில் கைதாகி இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களான சீ. தவராஜா, ராஜன் ஆகியோர் இத்தாக்குதலில் உயிரிழந்தனர்.

**ஈரோஸுக்கு ரவைகள் அன்பளித்த பிரபாகரன்!**

படையினரிடமிருந்து ஈரோஸினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுக்குப் போதுமான ரவைகள் இருக்கவில்லை. இது தொடர்பாக அப்போதைய ஈரோஸ் பிரமுகர் பாலகுமாரன் பிரபாகரனைத் தொடர்புகொண்டார். கடல் வழியாக மிகுந்த ஆபத்தின் மத்தியில் கொண்டுவரப்பட்டு, காடு வழியாகச் சுமந்து வந்த 556 ரவைகளில் ஒரு பகுதியை ஈரோஸிடம் அன்பளிப்பாக வழங்கினர் புலிகள்.

புளொட் - ஈ.பி.ஆர்.எல். எவ்வுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பாதிக்கப்பட்ட தரப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புலிகள் சமரசமாகத் தீர்த்து வைத்தனர். புளொட்டினால் கைதான ஈ.பி.ஆர்.எல்.எவ்வினரை விடுவித்தனர். பின்னர் ஈ.பி.ஆர். எல்.எவ்வினரால் கைதான புளொட் உறுப்பினர்களையும் விடுவித்தனர். புளொட்டிடம் அகப்பட்ட ஈ.பி. ஆர்.எல். எவ். உறுப்பினரைப் புளொட் தோழிகள் மீசையை இழுத்துச் சித்திரவதை செய்ததால் ஆத்திரப்பட்டே இவர்களைக் கைது செய்திருந்தனர் ஈ.பி.ஆர்.எல். எவ்வினர். மகிழூரில் நடந்த இந்தச் சமரச முயற்சியின் ஆரம்பத்தில் இரு பகுதியினரும் ஆத்திர நிலையில் இருந்தனர். ஆனாலும் ஒருவரை ஒருவர் தோழர் என்றே கூறிக்கொண்டே கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினர். மாறி மாறி இரு பகுதியினரிடமும் பேசிக்கொண்டிருந்த பசீர் ஒரு கட்டத்தில் தானும் தோழர் என்று சொல்லிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். உடனே சுதாகரித்துக் கொண்டார. இப்படியே கதைத்துப் பழகினால் தமது சகாக்கள் மத்தியிலும் இதே வார்த்தையையே பயன்படுத்த வேண்டுமே - தன்னை நக்கலாகப் பார்ப்பார்களே என்ற எண்ணத்தில் நிதானித்துக் கொண்டார.

**தோழர் என்ற சொல்லைக் கொச்சைப்படுத்திய ஈழ இயக்கங்கள்!**

'புளொட், ஈ.பி.ஆர்.எல். எவ். போன்ற இயக்கத்தவர்கள் மூச்சுக்கு முந்நூறு தடவை ஹதோழர்ஹ எனச் சொல்வர். அப்படி அழைப்பது செயற்கையாக இருப்பது போல் தோன்றியது புலிகளுக்கு. "யாழ்ப்பாணத்தில் உங்களது தோழர்கள் தூஷணத்தால் பேசுகிறார்களே?" என மட்டக்களப்பிலுள்ள புலிகளிடம் கேட்பதுண்டு. தாங்கள் நட்பு விடயத்தில் இன்னமும் பக்குவப்படவில்லையோ எனப் புலிகள் சிந்தித்ததுண்டு. ஒருநாள் மாலை கிரான்குளத்தில் ஒரு சந்திப்புக்காகப் போயிருந்தனர் இரு புலிகள். அவ்வேளை பிரதான வீதியால் எதிரெதிரே வந்த அதிரடிப் படையினரின் வாகனங்கள் திடீரென நின்றன. தங்களுக்குள் உரையாடவே சடுதியாக அதில் பயணித்தவர்கள் வாகனத்தை நிறுத்தினர். ஆனால் ஏதோவொரு முற்றுகை நடக்கப்போகிறது எனக்கருதிய புலிகள் இருவரும் ஆற்றங்கரையை நோக்கி விரைந்தனர்.

(நாளையும் வரும்)

உலகச் செய்திகள்

# பிளவுபட்ட உலகமாக எங்களால் கொரோனாவை வெல்ல முடியாது

ஜெனிவா, ஜூன் 24


பிளவுபட்ட உலகமாக நாம் கொரோனா தொற்று நோயைத் தோற்கடிக்க முடியாது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனம் கெப்ரியாயேசஸ் நேற்று முன்தினம் கூறும்போது, "உலகம் தற்போது எதிர்கொள்ளும் மிகப் பெரிய அச்சுறுத்தல் வைரஸ் அல்ல. ஒற்றுமையின்மை மற்றும் உலக அளவில் நிலவும் தலைமைப் பற்றாக்குறையே தற்போது நிலவும் அச்சுறுத்தல். பிளவுபட்ட உலகத்துடன் இந்த தொற்றுநோயைத் தோற்கடிக்க முடியாது.



தொற்றுநோய் அதிகரித்து வருகிறது. இந்தத் தொற்றுநோய் உடல் குறைபாட்டைவிட பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்தப் பாதிப்பு தொடரும்" என்றார்.

முன்னதாக, கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுகிறது என்றும், ஊரடங்குத் தளர்வுகளை கவனமாகக் கையாள வேண்டும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் சமீபத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஹஜ் புனித பயணம் ரத்துச் செய்யப்படாது!

ஹஜ் புனித பயணம் இந்த ஆண்டு ரத்து செய்யப்படாது. ஆனால், வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று சவூதி அரசு அறிவித்துள்ளது.

இதேநேரம், ஹஜ் புனித யாத்திரையில் உள்நாட்டைச் சேர்ந்தவர்களும், வெளிநாடுகளில் இருந்து ஏற்கனவே வந்து நாட்டில் தங்கியிருப்பவர்களுக்கு அனுமதியளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக உம்ரா புனித பயணம் மேற்கொள்ள அனைத்துத் தரப்பினருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில், ஹஜ் பயணமும் தடை செய்யப்படும் என்ற அச்சம் நிலவியது. இந்நிலையிலேயே சவூதி அரசின் புதிய அறிவிப்பாக அந்த நாட்டில் இருப்பவர்கள் மட்டும் ஹஜ் பயணத்தை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. இதனால் வெளிநாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

கடந்த 90 ஆண்டுகளில் சவூதி அரேபியா ஹஜ் புனித பயணத்தை நிறுத்தியது கிடையாது. ஆனால் முதல்முறையாக இந்த முறை ரத்தாகுமோ என்ற அச்சம், கவலை இஸ்லாமிய மக்களிடம் நிலவியது.இந்நிலையிலேயே அவர்களைத் தெளிவுபடுத்தி, ஹஜ்பயணம் தடை செய்யப்படவில்லை. வெளிநாட்டினருக்கு மட்டுமே தடை என சவுதி அரேபிய அரசு தெரிவித்துள்ளது.

ஹஜ் புனித பயணத்தில் வருடந்தோறும் 25 இலட்சம் பேர் மெக்கா, மதினாவில் குவிவார்கள். இதன் மூலம் ஆண்டுக்கு 1,200 கோடி டொலர் வருமானம் சவூதி அரேபிய அரசுக்கு கிடைக்கும். ஆனால், இந்த ஆண்டு பெரும் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

# ஜப்பானில் அமெரிக்க தளத்தில் ஆயுதக்கிடங்கில் தீ விபத்து

ரோக்கியோ, ஜூன் 24

ஜப்பானின் ஒக்கினாவா மாகாணத்தில் உள்ள கதினாவ நகரில் அமெரிக்க இராணுவத்தின் மிகப்பெரிய விமானப் படை தளம் உள்ளது.

சுமார் 2 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த விமானப்படைத் தளத்தில் 25 ஆயிரத்து 800 அமெரிக்க வீரர்களும், அவர்களது குடும்பத்தினர் 19 ஆயிரம் பேரும் உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காலை இந்த விமானப்படை தளத்தில் திடீர் தீ விபத்து நேரிட்டது. ஆயுதக் கிடங்கில் பற்றிய தீ, மளமளவென கொழுந்துவிட்டு எரிந்த தீ, சற்று நேரத்தில் விமானப் படைத்தளத்தின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

இதையடுத்து விமானப் படைத் தளத்தில் இருந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து செயல்பட்டு தீயை அணைத்தனர். அதிர்ஷ்டவசமாக இந்த தீ விபத்தில் உயிரிழப்போ அல்லது யாருக்கும் காயமோ ஏற்படவில்லை. தீ விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.



# வசிக்காத மாளிகையின் தொட்டியில் விலையுயர் நீரை நிரப்பிய ஜனாதிபதி!

லண்டன், ஜூன் 24

லண்டனில் 1,200 கோடி ரூபாவுக்கும் அதிகம் மதிப்புடைய மாளிகையின் தண்ணீர் தொட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் கோடீஸ்வரர் ஒருவர் உலகின் மிகவும் விலை உயர்ந்த ஈவியன் குடிநீரை நிரப்பிய தகவல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஐக்கிய அரபுஎமிரேட்ஸின் ஜனாதிபதியும் - கோடீஸ்வரர்களில் ஒருவருமான ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹ்யான் தண்ணீர் தொட்டியில் உயர்ரக ஈவியன் குடிநீரை நிரப்பி உள்ளார். இதற்காக ஈவியன் குடிநீர் போத்தல்கள் பிரான்ஸ் நாட்டில் இருந்து கப்பலில் வரவழைக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

ஈவியன் குடிநீர் லீற்றருக்கு ஆயிரத்து 500 ரூபா வரை விற்கப்படுகிறது. தற்போது 71 வயதாகும் ஷேக் கலிபா, லண்டனில் உள்ள அந்த 18 ஆம் நூற்றாண்டு மாளிகையில் ஆண்டுக்கு எப்போதாவது ஒரு சில நாட்கள் மட்டுமே தங்கிச் செல்வது வழக்கம் என கூறப்படுகிறது.

லண்டனில் இவருக்கு சுமார் 12.45 இலட்சம் கோடி ரூபா அளவுக்கு சொத்துக்கள் இருக்கின்றன. மேலும் ஷேக் கலீபா அல்லது அவரது குடும்பத்தினர் எவரும் 17 ஆண்டுகளாக வருகை தராத, மட்ரிட்டுக்கு வடக்கே அமைந்துள்ள ஒரு மாளிகையின் பாதுகாப்புக்கு என 15 நிரந்தர ஊழியர்களுக்காக ஆண்டுக்கு ரூ.4.15கோடிக்கும் அதிகமாக செலவிட்டார் என்பது தெரியவந்துள்ளது.

ஷேக் கலீபாவின் தந்தையே ஐக்கிய அரபு எமிரேட்ஸை நிறுவியவர் என்பதால், 2004-ல் அவர் மறைவுக்கு பின்னர் இவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கிறார்.

# தென்கொரியாவை தாக்கியது கொரோனா 2ஆவது அலை!



சியோல், ஜூன் 24

தென்கொரியாவில் கொரோனா தொற்று குறைவாக இருக்கின்றபோதிலும், அதன் இரண்டாவது அலை முன்னரே ஆரம்பித்து விட்டது என்று தென்கொரிய சுகாதாரத்துறை நம்புகின்றது.

கொரோனா தொற்றை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திய நாடு என்ற பெருமையை தென்கொரியாவும் பெற்றது. ஆனால், தற்போது பரவும் கொரோனா வைரஸின் தாக்கம் வரும் மாதங்களிலும் தொடரும் என்று கருதப்படுகின்றது.

தென்கொரியாவில் கொரோனா முதல் அலை ஏப்ரல் வரை நீடித்தது. இருப்பினும், தென் கொரியாவின் தலைநகரான சோல் நகரத்திலுள்ள இரவு விடுதிகள் உள்பட பல நோய்த்தொற்று மூலங்களின் காரணமாக மே மாதம் முதல் மீண்டும் கொரோனா தொற்று பரவ ஆரம்பித்துள்ளது. அங்கு, 24 மணி நேரத்தில் 17 பேருக்கு புதிதாக தொற்று இனங்காணப்பட்டது. இவர்களில் பலரும் பெரிய அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் என்று கூறப்படுகின்றது.

அண்மை நாட்களாக கொரோனா தொற்று நாட்டில் அதிகரித்துள்ளது என்றும் இது இரண்டாவது அலை என்ற முடிவுக்கு தாம் வந்துள்ளதாகவும் மருத்துவர் ஜியாங் கூறினார். எனினும், இதற்கு முன்பு உருவான கொரோனா அலை இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று கொரிய நோய் கட்டுப்பாட்டு மையம் கூறி வந்தது.

விடுமுறை காலமான மே மாதத்தின் தொடக்கத்தில் வார இறுதி இரண்டாவது அலை தொடங்கியது என்பது தற்போது தெளிவானது என்று மருத்துவர் ஜியாங் கூறுகிறார்.

முன்னதாக திங்கட்கிழமை சோல் நகரத்தின் தெற்கே உள்ள டிஜியோன் என்னும் பகுதியில், பல சிறிய வைரஸ் பரவல் மூலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அங்குள்ள அருங்காட்சியகங்கள், நூலகங்கள் போன்ற பொது இடங்களில் கூட்டங்களை தடை செய்வதாக உள்ளூர் நிர்வாகம் அறிவித்தது.

இதையடுத்த மூன்று நாட்களில் புதிய நோய்த்தொற்று தினசரி 30 என்ற எண்ணிக்கையையும் நகர மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை 70 சதவீதத்தையும் தாண்டினால் மீண்டும் கடுமையான சமூக விலகல் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்படும் என்று அந்த நகரத்தின் மேயர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென் கொரியாவில் முதலாவது தொற்றாளி இனங்காணப்பட்ட 20ஆம் திகதி முதல் இன்று வரை 280 பேர் உயிரிழந்தனர். 12,000 இற்கும் மேற்பட்டோருக்கு நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டது. இவர்களில் 1,277 பேர் தற்போது சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2020 அன்று வெளியிடப்பட்டது.